10th September 1960]

SRI P. G. MANICKAM: இதற்கு என்று ஹரிஜன நல இலாகாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்பெஷல் டெப்டி கலெக்டர் அவர்கள் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து எந்தெந்தவிடங்களில் புது சங்கங்கள் ஏற்படுத்தலாம், எவ்வளவு ஏக்கரில் ஏற்படுத்தமுடியும் என்ற கணக்கு கொடுத்திருப்பின் அந்த விவரங்களை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அந்தக் கணக்குதான் மேஜை மீதுள்ள அறிக்கையில் இருக்கிறது. எங்கெல்லாம் விவசாயத்திற்கு சாதகமாக இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கூட்டுறவு பண்ணை கொண்டு வர அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM: இந்தக் கூட்டுப் பண்ணை சங்கங்களில் யார் யார் அங்கம் வகிப்பார்கள்? எவ்வளவு அங்கத்தினர்கள் இதில் இருப்பார்கள்?

THE HON. SRI P. KAKKAN: கூடுமான வரையில் 50-திலிருந்து 100 ஏக்கர் உள்ள நிலமாகயிருந்தால் பார்த்து கூட்டுப்பண்ணைக்கு சாதகமாகயிருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

Facilities (Harijans)

* 613 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation on 10th June 1960 from the people of Erode taluk about the provision of protected water-supply schemes for Harijans, formation of roads leading towards Harijan colonies and assignment of house-sites for Harijans in Erode taluk, Coimbatore district; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No representation from the people of Erode taluk was received. But the hon. Member subsequently wrote to the Government detailing the requirements of Harijans in Erode Taluk.

(*b*) The requests are under the consideration of the Government in consultation with the Collector of Coimbatore and the Director of Harijan Welfare.

Land holding (Ceilings)

* 614 *Q*.—SRI A. VEDARATHNAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்ச வரம்பு சம்பந்தமாய் பரிசீலிக்க மத்திய அரசாங்கத் திட்டக் கமிஷன் நியமித்திருக்கும் கமிட்டியின் முடிவு எவ்வகையிலாவது நம் மாநில உச்ச வரம்பு மசோதாவை பாதிக்குமா?

(ஆ) அப்படியானல், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Sir, no official communication has been received from the Planning Commission in the matter.

[10th September 1960

SRI A. VEDARATHNAM: அப்படியில்லையானால், இப்போது உச்சவரம்புச்சட்டம் கொண்டு வர கால தாமதம் ஆவதற்கு அதுதான் காரணமோ என்று விவசாயிகள் ஐயுறு கிறார்கள். ஆகவே அது காரணம் இல்லையானால் இப்போது இருக்கின்ற காலதாமதத்தை தவிர்க்கும் வகையில், விவசாயி களுக்கு அனுகூலமாக நிலங்களை விற்பதற்கு போட்டிருக்கின்ற தடையை இச்சட்டம் வருகின்றவரையாவது மாற்றி வைக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது கால தாமதம் ஒன்றும் ஏற்படவில்லை. பொறுக்குக் கமிட்டி இதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்வதற்காக வருகின்ற 19-ம் தேதி யிலிருந்து சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களுக்குப் போகின்றது. இதில் வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் பிரோகிராம்படிதான் நடந்துகொண்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது போட்டிருக்கும் சட்டத்திற்கு ஏதாவது விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே இதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொல்லிக்கொண்டிருந் தார்கள். ஆகவே இதற்கு என்று ஒரு பில் கொண்டு வந்து பின்னால் இந்த மாதிரி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

Small-pox

• 615 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் உள்ள கிராமங்களில் பெரியம்மை பரவியிருப்பது உண்மையா?

(ஆ) அப்படியானால் எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

(இ) அதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Sporadic cases have been reported from one village only.

(*b*) One.

(*c*) Intensive vaccination work has been carried out to arrest the infection.

SRI S. M. ANNAMALAI: அந்த கிராமத்தில் அம்மை பரவி இருக்கிற தகவல் எப்பொழுது தாசில்தாருக்கு தெரியும் என்று சொல்ல முடியுமா? அந்த இடத்தில் ஏதாவது அம்மை போன்ற நோய்கள் வந்தால் கவனிப்பதற்கு காடாம்புலியூர் என்ற இடத்திலுள்ள பிரைமறி ஹெல்த் சென்டர்தான் உபயோகப்பட வேண்டும். அதோடு ஜவ்வாது மலையிலிருந்து மொபைல் யூனிட்டை ஆயங்காலத்திற்கு மாற்றிவிட்டார்கள்.